**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சி ராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 28–ஆம் நாள், புதன்கிழமை

**<u>இ.ம.எண். 11/2025 இன் அ.வ.எண்.56/2003</u>**

**<u>CNR No. TNSA13-000027-2003</u>**

A.பிரகாஷ் அவரின் ஜெனரல் பவர் ஏஜெண்ட்
G.வெங்கடேசன் . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. கலைமகள் சபா, கொமாரபாளையம்
rep by its Special Officer Cum Additional Inspector General of Registration
2. செல்லையா, ரீஜினல் மேனேஜர்,
கலைமகள் சபா, சேலம் டிவிஷன் . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 27.01.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V.R.ராஜேந்திர மகஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சந்தானம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர் வழக்கில் வாதியின் ஜெனரல் பவர் ஆப் அட்டர்னி ஏஜெண்ட்டும் இம்மனுவில் மனுதாரர் என்றும், தாவாவின் விசாரணைக்காக வழக்கறிஞர் தாவா பிராதை பார்வையிடும் போது அதில் பரிகார பத்தியில் சில குறைபாடுகள் இருப்பது தெரிய வந்ததாகவும், மேற்படி தாவா அவசர தாவாவாக தாக்கல் செய்யும்போது கவனக்குறைவாகவும், எதேச்சையாகவும் மேற்படி தவறுகள் ஏற்பட்டுவிட்டதாகவும், அவற்றை சரி செய்ய வேண்டி தாவா பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்றும், மேற்படி திருத்தம் செய்வதினால் தாவாவின் சாராம்சம் மாறாது என்றும், எனவே இம்மனுவில் குறிப்பிட்டுள்ளபடி திருத்தம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்து 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் 2ம் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். வழக்கானது 2003ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவாவில் திருத்தம் செய்ய வேண்டி மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கும் திருத்தமும், ஏற்கனவே தாவாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் திருத்தமும் ஒரே பொருளைக் கொண்டுள்ளதாகவும், ஏற்கனவே இ.ம.எண்.5/2023 மனுவானது 11.01.2024 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு படி தாவா பரிகாரம் C–ல் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே தாவா பரிகாரம் a, b, cல் திருத்தம் செய்ய கோரியுள்ளது அவசியமற்றது என்றும், இம்மனுவானது வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிக்கும் நோக்கத்துடன் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. மனுதாரர்/வாதி தரப்பில் தனது வழக்குரை பரிகாரத்தில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மாறாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கானது 2003ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஏற்கனவே தாவாவை திருத்தம் செய்துள்ளதாகவும், வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கானது விசாரணை தொடங்கப்படாத நிலையில் உள்ளதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் தன்மை மாறாது என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், இம்மனுவை நிபந்தனையின் பேரில் அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. தீர்வு

இறுதியாக, இவ்வழக்கானது 2003ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளதால், இம்மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.2,000/- ஐ 02.02.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 03.02.2026.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 28-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.01.28 17:52:36 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

IA.No.11/2025 in O.S.No.56/2003

1. மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.01.28 17:52:47 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 11/2025 இன்
அ.வ. எண். 56/2003
நாள் : 28.01.2026